திருவள்ளுவர் ஆண்டு 2043

அக்டோபர் - 2012

செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 12

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



திருநாவுக்கரசர் இசை ஆராய்ச்சி - இசைக்கல்வி அறக்கட்டளை, செந்தமிழ்க் கல்லூரி இணைந்து நடத்திய மூன்று நாள் தேவார இசைப் பயிலரங்கத் தொடக்க விழாவில் இருபெரும் செயலர்கள், முதன்மையர் மற்றும் முதல்வர் (நாள் : 26-09-2012)

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 12 திருவள்ளுவர் ஆண்டு 2043

அக்டோபர் 2012

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

தொகை நூல்களில் பறவைகள்	இரா. கார்த்திகேயன்	4
தமிழ் ஆங்கிலம் உடம்படு மெய்கள் மீள் பார்வை	தெ. முருகசாமி	7
வள்ளலாரின் அழகியல் பார்வை	ப. வேல்முருகன்	10
ஐந்திணை எழுபது – மருதம் காட்டும் குடும்பம்	இரா. பிரேம்குமார்	16
'அறன்இல்' அன்னை	சு. மகேஸ்வரி	21
தொழிற்கல்வி	ஆறுவிரல் ஐம்பொறி, வீரசோழபுரம்	29
கொங்கு இலக்கியங்களில் சத்தி வழிபாடு (இயல் – 4)	கா. சந்திரமோகன்	30
திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள்	சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி	37

இதழ் மணம்

அன்புடையீர், வணக்கம் !

நலமே நாளும் நிறைக. அக்டோபர் மாத செந்தமிழ் இதழ், இம்மாதம் வெகு சிறப்பாக வெளிவந்திருப்பதை படித்து மகிழ்வீர்கள் என நம்புகிறேன். சிம்புள் பறவை போன்ற அரிய வகை பறவைகள் சங்க காலத்தில் வாழ்ந்தவற்றை 'தொகை நூல்களில் பறவைகள்' என்ற தலைப்பில் இரா. கார்த்திகேயன் அகநானூறு மற்றும் குறுந்தொகைப் பாடல்கள் வழி வெளிப்படுத்தி இருக்கிறார். சென்ற மாத இதழில் வெ. பெருமாள்சாமி அவர்கள் வெளியிட்ட 'தமிழ் ஆங்கிலம் உடம்படு மெய்கள்' என்ற கட்டுரை பற்றிய முனைவர் த. பெரியாண்டவன் அவர்களுடைய விருப்பும், தெ. முருகசாமி அவர்களுடைய மறுப்பும் வாசகர்களுக்குத் தரப்பட்டுள்ளது. அறிஞர்களின் கருத்து வெளிப்பாடுகளை வெளியிட நமது செந்தமிழ் இதழ் எந்தக் காலத்திலும் தயங்கியதில்லை.

இதனைத் தொடர்ந்து வள்ளலாரின் அழகியல் பார்வையில் என்னும் கட்டுரையில் உயிர் இரக்கம் உள்ள இடத்தில் எல்லா நலன்களும் இருத்தல் இயல்பு என்னும் கருத்தை திரு. பா. வேல்முருகன் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் திறம் பாராட்டிற்குரியது.

மருதம் காக்கும் குடும்பத்தை இரா. பிரேம்குமார் அவர்களும் 'அறன்இல் அன்னை'யைப் பற்றிய சு. மகேஸ்வரி அவர்களும் கட்டுரை தந்து நம்மை மகிழ்விக்கின்றனர். சத்தி வழிபாட்டின் தத்துவத்தை கா. சந்திரமோகன் அவர்கள், 'இலக்கியங்களில் சத்தி வழிபாடு' என்னும் தலைப்பில் தன்னுடைய ஆய்வினை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நிறைவாக சித்தாந்த நன்மணி முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் 'திருக்குறளின் தோற்றக் களம்' தொடர்கிறது.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

தொகை நூல்களில் பறவைகள்

இரா. கார்த்திகேயன்
திருப்பனந்தாள்

இவ்வுலகில் 15 கோடி ஆண்டுக்ளுக்கு முன்பாக முதன் முதலாகத் தோன்றிய பறவை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அதன் பெயர் ஆர்க்கியோப் டெரிக் என்பதாகும். இப்பறவைக்கு ஆடு, மாடு போன்று பெரிய பற்கள் காணப்பட்டன. மிக நீளமான வால் பகுதியைக் கொண்டிருந்தன. ஆனால் அந்த வால் இறகுகளால் ஆனதல்ல. அது எலும்பு உருவம் பெற்று இருந்தன என்றும், அதன் இறக்கைகளில் விரல்கள் காணப்பட்டன என்றும் பறவை அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சிம்புள்

அது போன்றப் பறவை பற்றி நாம் தொகை நூல்களில் மருதக் கலி 24ஆம் பாடலில் அகநானூறு 24 ஆம் பாடல்களில் பாடப் பெற்றுள்ளது. இது அரியவகை பறவையாகும். ஆனால் இது தற்போது அழிந்து விட்டது. இதனைப் பற்றித் தமிழில் உயிரினங்கள் பற்றி ஆய்வோர் மறந்து விட்டனர் போலும், இதன் பெயர் சிம்புள் என்பதாகும்.

இரண்டு தலை இருக்கும். கண் வட்டமான வடிவத்தை பெற்றும் காணப்படும். எட்டுக் கால்களைக் கொண்டும் இருக்கும் என்பது அறிய முடிகிறது.

என்னீவை, ஒருயிர் புள்ளின் இருதலை யுள்ளொன்று
பேரெதிந் தற்றாப் புலவல் நீ கூறினென்
ஆருயிர் நிற்மா றியாது

(மருதம் கலி 24 (4-6) நச்சினார்கினியர் உரை)

எனவும்,

இருதலைப் புள்ளியின் ஓர் உயிரம்மே (அகம் 12 (5))

எனவரும் அகப்பாடல் வரியால் அறியமுடிகிறது.

வங்கா

பறவையின் பெயர்	:	Orious Orious Kundoo
ஆங்கிலப் பெயர்	:	Indian Oriole
தற்காலப் பெயர்	:	மாங்குயில்

இந்தப் பறவை குறுந்தொகை 151ஆம் பாடலில் நற்றிணை 341ஆம் பாடலில் மட்டுமே புலவர்களால் பாடப் பெற்றுள்ளது அறிய முடிகிறது.

(குறுந்தொகை 151ஆம் பாடலில் கூறப்பட்டுள்ள வங்க என்ற பறவை மாங்குயில் (அல்லது) மாம்பழக் குருவி என்பது தெளிவாகிறது. இதையே தெலுங்கு மொழியில் வங்கா பண்டு, வடமொழியில் வங்கா என்றழைக்கின்றனர். கோல்டன் சர்கல் பறவை நூலில் Orious Ordus Kundoo என்று பி.எல். சாமி குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களில் புள்ளின விளக்கம் பக்கம் 243).

கால் சிவப்பு நிறமாகவும் காணப்படும்; புல்லூறுகள் இதனை வேட்டையாடி உண்டு வந்தன என்பதையும் அறிய முடிகிறது.

“வங்கா கடந்த செங்காற் பேட்டை
எழால் உற வீழ்ந்தெனக் கணவற் காணாது” (குறுந். 151 (1-2)

என வரும் பாடல் வரியால் அறிய முடிகிறது.

அக்கால வேடவர்கள் வங்கா பறவையை வேட்டையாடியும் வந்தனர்.

“வங்கா வரிப் பறைச் சிறு பகு முனையிற்” (நற்றிணை 341 (1)

என வரும் பாடல் வரியால் அறிய முடிகிறது.

முடிவுரை

இக்கட்டுரை வாயிலாக இவ்வுலகில் முதன் முதலாக தோன்றியது ஆர்க்கியோப்டெரிக் பறவையாகும். அதனைப் போன்று நம் தொகை நூல்களில் 'சிம்புள்' என்ற பறவை இருந்துள்ளதையும், அது தற்போது அழிந்து விட்டது என்றும் அறிய முடிகிறது. 'வங்கா' என்பது மாங்குயில் என்றும் அறிய முடிகிறது.

ஓம் சக்தி

தமிழக அரசு தமிழ்தென்றல் திரு.வி.க. விருது பெற்ற
முனைவர் த. பெரியாண்டவன், எம்.ஏ.பி.எச்.டி.
முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்

ஓம் சக்தி இல்லம்
45/40, 2வது தெரு
அஞ்சுகம் நகர்
அசோக் நகர் அஞ்சல்
சென்னை - 600 083
நாள் : 29.9.2012

அன்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

செப்டம்பர் 2012 **'செந்தமிழ்'** இதழ் கிடைக்கப் பெற்றேன். பேராசிரியர் வெ. பெருமாள்சாமி அவர்களின் **'தமிழ் ஆங்கிலம் : உடம்படு மெய்கள்'** என்னும் கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன்.

சமயத் தொண்டாற்றத் தமிழகம் போந்த மேலை நாட்டறிஞர் **டாக்டர். கால்டுவெல் ஐயர்** அவர்கள் தமிழைக் கற்றுத் **'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'** என்னும் அரிய ஆய்வு நூலை ஆங்கிலத்தில் இயற்றினார். அவருடைய ஆராய்ச்சி முதன்மையாகத் தமிழோடு தெலுங்கு கன்னடம், மலையாளம் முதலிய தென்னிந்திய பிற மொழிக் கூறுகளை ஒப்பீடு செய்வதாக அமைந்தது. ஆனால், தமிழோடு திராவிட மொழிக் குடும்பத்தைச் சாராத ஆங்கிலம் ஒலிக்கும் முறையை ஒப்புமைப் படுத்தியுள்ள இந்த ஆய்வு மிகச் சிறப்பாகவும் ஆர்வமூட்டும் நடையில் சுவையாகவும் அமைந்துள்ளது. பாராட்டுகள். வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(ஒப்பம்) முனைவர் த. பெரியாண்டவன்

தமிழ் ஆங்கிலம் உடம்படு மெய்கள் மீள் பார்வை

தெ. முருகசாமி
காரைக்குடி

2012 செப்டம்பர் செந்தமிழ் இதழில் பேராசிரியர் திரு. வெ. பெருமாள்சாமி அவர்கள் எழுதிய தமிழ் ஆங்கிலம் உடம்படு மெய்கள் என்ற கட்டுரையின் கருத்துக்கள் மீள் பார்வைக் குறியன என்பதற்காக இக்கட்டுரை எழுதப்பட்டது.

ஒவ்வொரு மொழியின் ஒலி உச்சரிப்புக்கள் அந்தந்த எழுத்துக்களின் சார்பைப் பொருத்தே அமையும். அதனால் அதனைப் பொதுமைப் படுத்தி இன்னொரு மொழியோடு ஒப்பிட்டுரைத்து அதன் ஏற்ற இறக்கங்களைக் கணித்துரைத்தல் பொருத்தமன்று என்பது அடிப்படையான கருத்து.

பக்கம் 7ல் O-வுக்காகக் காட்டப்பட்ட பத்து ஆங்கிலச் சொற்களில் - O புரியும் பதின் கவனப் பணியை ஆய்வோம் எனச் சுட்டிய பத்து சொற்களுக்கும் மேலாகவும் கூறலாமாயினும் சுட்டிக் காட்டிய ONCE என்பது போல Oவை முதலாக உடைய ON, ONION என்ற சொற்களில் Oவின் உச்சரிப்பு வேறு வேறாவையாகும் என்பதால் பதின்கவனம் என்ற வரையறையில் சொற்களை வரையறுக்க முடியாது.

பக்கம் 12ல் ஆங்கிலந்தான் எழுதுவது ஒன்று, சொல்வது இன்னொன்றாயிற்றே எனக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளதால் உச்சரிப்பையோ, உடம்படு மெய் பற்றியோ தமிழோடு ஒப்பிட்டறிய வாய்ப்பே இல்லை எனத் தெளிவாகத் தெரிவதால் ஒப்பாகக் கூற முயற்சிப்பது வலிந்து கூறுவதாக அமையுமேயன்றி இயல்பன்று என்றும் உணரலாம்.

மேலும் இங்ஙனம் கூறுவது ஆங்கிலத்திற்குள்ளேயும் பொருத்தப்பாடில்லை என்றும் உணரலாம். பக்கம் 14ல் TIE + ING = TYING எனக் காட்டப்பட்டதில் TIE என்றால் ஒரு துணி; ING என்றால் என்ன பொருள்? இந்த TIE சொல்லின் E என்ற உயிருடன் வருமொழி INGன் முதலெழுத்தான I உடன் சேரும் Y என்ற உடம்படு மெய் உருவானது என்றால் GO+ING என்ற உயிரும் உயிரும் சேரும் போது எந்த உடம்படு மெய் உருவானது?

கட்டுரையாளர் காட்டும் மற்றொரு சொல் PE RUUIA, PERU என்ற சொல்லுடன் IAN என்ற உயிர் முதல் முன் ஒட்டுச் சொல் இணையும் போது U என்ற உடம்படுமெய் வருவதானது, 'ஏனைய உயிர்வழி' வவ்வும் என்ற நன்னூல் நூற்பாவைப் பொருத்துவதும் முறையா? பொருள் பொருத்தம் இல்லாததால் முறையன்று.

தமிழில் உயிரும் உயிரும் சேரும் இரு சொற்களும் பொருளுடையவை. மணி + அடி, மணி + அழகு என்பன முறையே மணியடி, மணியழகு என்றால் நிலை மொழியும் வருமொழியும் பொருளுடையன. அவ்வாறாக, ஆங்கிலத்தில் சேர்வதில்லை. TYEக்குப் பொருள் உள்ளது போல் ING என்பதன் பொருள் யாது? PERU + IAN இந்த இரண்டிற்கும் என்ன பொருள்? எனவே உயிரெழுத்தும் உயிரெழுத்தும் என்றது மட்டும் காரணமாகாது. அவற்றில் உயிர்ப்பான பொருள் இருக்க வேண்டும். இதுதான் தமிழுக்கும் கட்டுரையாளர் குறித்த ஆங்கிலத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடாகும்.

எனவே தமிழில் ய், வ் என்ற உடம்படு மெய்கள் போல ஆங்கிலத்தில் அவ்வாறு கூறும் வார்த்தைக்கான வரையறை இலக்கணச் சொல் வழக்கு (TECHNICAL TERM) உண்டா? ஆக மொழிகளின் ஒலிகள் எந்நாட்டவர்க்கும் பொது என்றும், நம் ஒலிப்பு முறை பிற மொழிக்கும் பொருந்தும் என்றும் கூறுவது பொருந்தாது. இதன் உண்மையைத் தான் நன்னூல் பதவியலின் முதல் நூற்பாவின் உரையில் விருத்தி உரைக்காரர் உணர்த்தியுள்ளார்.

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்...... (எண். எழுத். பத. 1)

எழுத்தானாய பதம் அரசனம் முதலியவற்றால் அமைந்த சுண்ணம் போலாது மலரால் சமைத்த மாலை போல் நிற்றலின் எழுத்தே என்றும் எழுத்துக்கள் எவற்றெனத் தொடுத்தலின்றிப் பொருளுணர்த்துதலே இன்றியமையாத்து என்றும் அணித்திறன் ஒலி எழுத்தானாற்போல எழுத்தாலான ஒலி நுட்ப ஒழுங்கே பதமாம் என்றும் சிறப்பாக எழுதியுள்ள கருத்து விளக்கம் கட்டுரையாளர் காட்டும் ஆங்கில உடம்படு மெய்களுக்குக் காட்டும் சொற்களுக்குப் பொருத்தமாகாது எனத் தெளியலாம்.

ஒவ்வொரு மொழிக்குமான சொற்களின் இணைப்பு (ASSIMILATION) வேறு வேறானவை. அதைத்தான் அரிசனம் முதலியவற்றாலான சுண்ணம்,

மலரால் சமைத்த மாலை என்ற உவமைகள் விளங்குகின்றன. பல மணல் பொருள்களைத் தனித்தனியே கூட்டி ஒரு கலவை செய்து விட்டால் அக்கலவையைத் தனித்தனியே பிரித்தறிய முடியாது. ஆனால் தனித்தனி பூக்களை மாலையாகக் கட்டினாலும் அம் மாலையைத் தனித்தனி பூக்களாகவும் பிரித்தறியலாம். தமிழ் இம் மாலை போன்றது என்ற குறிப்பில் அதன் வரிவடிவும் ஒலி வடிவும் எத்தகைய சிறப்புக்குரியன என உணரும் போது அத்தனித் தன்மையைக் கட்டுரையாளர் சுட்டிய ஆங்கிலத்துடன் பொருத்துதல் சால்பன்று எனலாம்.

தி.வ.ஆ. 2043

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் — புரட்டாசி 13, 29.9.2012

பெருந்தகை அவர்கட்கு! வணக்கம்.

தற்போது வந்த செந்தமிழில் (2012, செப்டம்பர்) முதல் கட்டுரையாக வந்தது பற்றியதற்கு எனது மறுப்பை எழுதியனுப்பியுள்ளேன்.

அடுத்த இதழில் வெளியிட வேண்டுகிறேன். நல்ல ஆய்வுரைகள் பலரால் எழுதப்பட்டு வெளிவரும் செந்தமிழின் தொண்டு பழம் பெருமையைப் புதுப்பிக்கிறது. நன்றி!

அன்பன்..... **தெ. முருகசாமி**

வாசகர் வாசகம் (1)

அன்புடையீர், வணக்கம்.

செப்டம்பர் 2012இல் செந்தமிழில் இடம் பெற்ற ம. யாழினியின் ஆய்வுரை மிகவும் தகுதி சான்றது. மக்கட்சேய், யானைக் கன்று, வருடை மான் குட்டி, வளர்பிறை ஆகியவற்றைக் குழவி என்று மரபிலக்கணம் கூறுகிறது. இதற்கு ஒரு நுட்பமான காரணம் இருக்க வேண்டும். யானைப் பாகன் தன் பிள்ளைபோல யானைக் குட்டியையும், குறிஞ்சி மக்கள் தங்கள் பிள்ளை போல வருடை மான் குட்டியையும் ஓம்பியிருப்பர். திங்களைக் காட்டி அதன் அழகைச் சொல்லிக் குழந்தைக்குப் பாற்சோறு ஊட்டுவாள் தாய். இயற்கை நேயர்களான தமிழர்களுக்கு உயர்திணையும், அஃறிணையும் பாசத்திற்குரியவை. இந்த நுட்பத்தைக் கட்டுரையாளர் ஆழ்ந்து பார்த்துச் சுட்டியுள்ளார். அவருக்கும் செந்தமிழுக்கும் பாராட்டுக்கள். இதழுக்கு மெருகூட்டயுள்ள இவ்வாய்வுரை மாணாக்கர்க்குப் பெரிதும் பயன்படும். படித்தால் சுவைக்கும். செம்மொழித் தமிழ் வளர்க.

அன்பன்..... **இ.கி. இராசாமி**

வள்ளலாரின் அழகியல் பார்வை

ப. வேல்முருகன்

திருவருட்பிரகாச வள்ளலார் என உலகவரால் அறியப் பெற்ற இராமலிங்கர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அருட்கவிஞராகவும் ஞானியாகவும் திகழ்ந்தவர். வள்ளலார் இறை உணர்வில் திளைத்தும், அதிலே நில்லாமல், அதனால் பெற்ற ஆற்றலால் மனிதவினப் பற்றையும், உயிரினப் பற்றையும் செயலாக்கிக் காட்டியவராக அறியப் பெறுகிறார். இறையுணர்வு, உயிரிரக்கவுணர்வு ஆகிய இருமையுணர்வும் ஒருமை பெற்று அவர் கவிதைகளில் எளிய, நெஞ்சை உருக்கும் அழகிய நடையில் அழகுணர்ச்சியுடன் வெளிப்படுவதைக் காணலாம். வள்ளலார் படைப்புகளின் மையமாக உயிரிரக்கக் கோட்பாடு இயங்குவதை அறிய முடிகிறது. இவ்வகையில் உயிரிரக்கக் கண்ணோட்டமே வள்ளலாரின் அழகியல் பார்வையாக உள்ளதை உணரமுடியும்.

கவிப்பார்வை

கவிஞனின் பார்வையைக் கீழ்க்கண்டவாறு அறியலாம்.

கவிஞனை, க்ராந்தசக்ஷி என்பர் வடமொழியாளர். கவிஞனுடைய பார்வை சாதாரண மனிதனுக்கு உள்ள நோக்கைக் காட்டிலும் கூர்மையானது, விரிந்தது, காலத்தையும் இடத்தையும் கடந்தது என்பது அதன் பொருள்.

இவ்வகையில், அருட்கவிஞராகிய வள்ளலாரது கவிப் பார்வை உயிரிரக்கம், ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை போன்றவற்றின் அடிப்படையில் பிறந்த அழகியல் பார்வை என்பதை அவரது படைப்புகளின் வழி இவண் ஆராயப் பெறுகிறது.

அழகியல் பார்வை

ஆற்றல் மிக்கப் படைப்பாளரின் உணர்ச்சி நிறைந்த கற்பனையில் மூழ்கித் தோயும் உண்மைகள் மிகத் தெளிவாகவும், உயிரூட்டம்

நிறைந்தனவாகவும், அழகு வாய்ந்தனவாகவும் வெளிப்படும். கவிதை உணர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் கருத்தின் தரத்தை ஒட்டியே அவ்விலக்கியம் மதிப்பிடப் பெறும் என்பர் இலக்கியத் திறனாய்வாளர்கள். அருட்கவிஞர்கள் பரந்துபட்ட வாழ்க்கை அனுபவமும், நடுநிலையுணர்வும், சிறந்த பொருள்களைப் பற்றி ஆழ்ந்த அறிவும் வாய்ந்தவர்களாவர். அவர்களால் படைக்கப் பெறும் இலக்கியங்களில் உண்மை, நன்மை, அழகு நிறைந்திருக்கும் எனலாம்.

"கலைஞர் தாம் இன்புற்ற பிறகு, உலகம் இன்புறுமாறு

உணர்த்தல் வேண்டும்.

அழகுணர்ச்சியுடன் விழுமிய வாழ்வுணர்ச்சியும் குழைத்து

உணர்த்தினால்தான் உலகமும் சிறந்த இன்பம் பெற முடியும்."

என்பார் அறிஞர் ஷார்ப்.

இவர் கருத்தின் வழி நோக்கின் வாழ்க்கையின் ஆழமான விழுமிய உணர்ச்சிகளான இரக்கம், அன்பு, வீரம் போன்றவை அமைந்து, அவற்றின் வாயிலாக உயிர்கள் எல்லாவற்றுடனும் இயைந்து உணரும் உயரிய அனுபவம் விளங்கினால்தான் கலையால் நிலையான அழகின்பத்தை நல்க முடியும் எனக் கூறலாம். அழகியல் அனுபவம் என்பது நாம் காணும் கலைப்பண்பு கூறுகளைப் பொறுத்து இருக்கிறது. அதே நேரத்தில் அழகியல் ரீதியான பார்வை இல்லாதவன் மிக உயர்ந்த கலைப்படைப்பைப் பார்க்க நேர்கிற போது கூட அதிலிருந்து கலை இன்பத்தைப் பிழிந்தெடுக்க முடியாதவனாகி விடுகிறான். இரு நிலைகளையும் தொட்டுச் செல்கிறது இந்த அழகியல் பார்வை.

உயிரிரக்கக் கண்ணோட்டமே வள்ளலாரின் அழகியல் பார்வையாக உள்ளதால், அவருள்ளத்தில் எழுந்த உயிரிரக்க நெறி, ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை போன்ற கருத்துக்கள் கற்பார்க்கு நிலையான அழகின்பத்தை நல்குகிறது என உணரலாம்.

உயிரிரக்க நெறி

வள்ளலார் இயற்கையோடியைந்த வாழ்வை மேற்கொண்டு இயற்கையெனும் இறைவனிடத்து அன்பு செலுத்தியவர். இயற்கை வாழ்வின் முடிந்த நிலை உயிரிரக்க நெறியாகும். உயிரிரக்கம் உள்ள இடத்தில் எல்லா

நலன்களும் இருத்தல் இயல்பு. தீமைகள் அங்கு அண்டுவதில்லை. வள்ளலார் உயிரிரக்க நெறியில் தலை சிறந்து விளங்கியவர் என்பதை அவரது படைப்புகள் காட்டுகின்றன. பிற உயிர்களின் உயர்வைப் பற்றியே நினைந்து உருகி அருள் நெறி நின்று அருளறத்தையே கடைப்பிடித்தார். வள்ளலார் உயிரிரக்கமாகிய அருளின் தன்மையை நன்கு உணர்ந்து, உயிரிரக்க அழகியல் பார்வையால் இவ்வுலகைக் கண்டு உயிரிரக்க வடிவமாகவே ஆயினர் என்பதை அவரது 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' உரைநடைப் படைப்புகளாலும், திருவருட்பா பாடல்களாலும் அறியப் பெறலாம். வள்ளலாரின் சமயம் உயிரிரக்கச் சமயம் என்பார் திரு.வி.க. இதனைப் பின்வரும் குறிப்பினால் அறியலாம்.

> **இராமலிங்க சுவாமிகள் சமயம் என்ன என்று எவரேனும் கேட்பின், அவர்க்கு**
> ***சுவாமிகள் சமயம் ஜீவகாருண்ய சமயம் அல்லது அருணெறி என்று கூறலாம்.***

உயிரிரக்கமே வள்ளலார்

மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் உணர வேண்டும் என்றும், அவ்வாறு உணராவிட்டால் அறிவினால் பயன் இல்லை என்பதை வள்ளுவர்,

> **அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
> **தந்நோய்போல் போற்றாக் கடை.** (குறள்: 315)

என்று கூறுகிறார்.

எவ்வுயிரையும் தன்னுயிர் போல் உணரும் ஒத்துணர்வு பற்றி மு. வரதராசனார்

> **பிற உயிரின் இன்பதுன்பத்தைத் தன் இன்பம் துன்பம் போல் உணரும் இந்த**
> **உணர்ச்சியை ஒத்துணர்வு எனக் குறிப்பர். இது**
> **கலைஞரிடத்தில் சிறந்து விளங்குகிறது. இதனால்தான் புலவர் தம்**

துன்பத்தைப் பாடுவதோடு மட்டும் அல்லாமல், மற்றவர்கள் கூறும் துன்பத்தையும் கற்பனை செய்து பாடவல்லராக விளங்குகிறார்.

என விவரிக்கிறார்.

இத்தகைய ஒத்துணர்வு மிக்கவராக வள்ளலார் விளங்குகிறார் என்பதை,

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ.

என்னும் பாடல் வழி அறியலாம்.

உயிர்களிடத்துச் சிறு வேற்றுமை உணர்ச்சியுமின்றி எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் ஒத்துணர்ந்து, அதன்கண் தோன்றும் ஒருமைப்பாட்டுரிமையை உடையவர்கட்கு பணி செய்யத் தம் உள்ளம் விழைகிறது எனக் கூறும் வள்ளலாரின் அழகியல் பார்வையை மேற்கண்ட பாடல் விளக்குகிறது.

வள்ளலாரின் உயிரிரக்க நிலையை ஒப்புமை காட்ட முடியாததொன்றெனலாம். உயிரிரக்கமே உயிராகவும் உடலாகவும், அவராகவும், இருப்பதாகவும், உயிரிரக்கமும் தாமும் இரண்டிலை ஒன்றேயாம் எனவும், தம்மிடமிருந்து உயிரிரக்கம் நீங்கிடில் தம்முயிரும் நீங்கிடும் எனக் கூறுவர். இத்தகைய அழகிய கண்ணோட்டத்தை,

வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில்என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்

உருவளன் உயிர்தான் உயிர்இரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்
தொருவனே நின்பத் தானை.

என்னும் பாடல் வெளிப்படுத்தும்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை

வள்ளலார் உயிரிரக்கமெனும் அழகியல் பார்வையால் அகிலத்தைப் பார்ப்பவர். எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணுபவர். பேதமற்ற ஒருமை உணர்வில் இருப்பவர். தன்னைப்போலவே இவ்வுலக உயிர்கள் ஒருமையில் வாழவே வேண்டும் என்ற எண்ணுபவர். இதன் பொருட்டே சுத்த சன்மார்க்க நெறியைக் கண்டவர். சுத்த சன்மார்க்கத்தின் உயர்ந்த குறிக்கோள் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைதான் என்கிறார். சுத்த சன்மார்க்கத்திற்குத் தடையாகவுள்ளவைகளை நீக்கினால் எல்லோரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை உடையவர்களாவர் என்பதே வள்ளலாரின் கருத்தாகும். இதனைச் சுத்த சன்மார்க்க சிறு விண்ணப்பத்தில் கூறுவர். அதில்,

> எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதிற் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

என்கிறார்.

உயிர்கள் அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டவை என்றும் ஓர் உயிர் மற்றோர் உயிர் துன்பப்படும் போது ஏற்படும் உருக்கமே ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை ஆகும். இதனைப் பின்வருமாறு வள்ளலார் விளக்குவர்.

> சீவர்களெல்லாம் ஒருதன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட

> பழியால் ஒருரிமையுள்ள சகோதரர்களேயாவர். சகோதர்களுள் ஒருவர் ஓர் ஆபத்தால் துக்கப்படுகின்ற போதும் துக்கப்படுபவரென்று அறிந்தபோதும், அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலின் ஒரு சீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும் துக்கப்படுமென்றறிந்த போதும் மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்ம உரிமையென்று அறிய வேண்டும்.

மக்கள் முதல் மண்கட்டி வரை

வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை உயிரிரக்க அழகியல் பார்வையால் தோன்றியது. எனினும் இரக்க உணர்வு உயிர்களிடத்து மட்டும் நிற்கவில்லை. உயிரற்ற சடப்பொருள்களிடத்தும் நீண்டதைப் பின்வரும் அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பிலிருந்து அறியலாம்.

> ஒருகால் ஜீவகாருண்யத்தைக் குறித்துச் சில அன்பர்கள் நெடுநேரம் வாசா ஞானமாய்ப் பேசிக் கொண்டிருந்ததை வள்ளலார் அறிந்து ஜீவகாருணியம் எவ்வளவு தூரம் பரந்துள்ளது அறிவீர்களா? என்று கேள்வி கேட்டு, தெருவில் பெரியோர் இருவர் செல்லும் போது ஒருவர் கால்பட்டு ஒரு மண்கட்டி உடைந்து விட்டது. அதைக் கண்ட மற்றொருவர் மூர்ச்சையையானவரைக் காரணங் கேட்க, தமது காலினால் மண்கட்டியின் இயற்கை நிலையாகிய நேர்த்தி குலைந்து விட்டதுதான் என்றார் என்று ஜீவகாருண்யத்தின் எல்லையை விளக்கினார்.

மக்கள் முதல் மண்கட்டி வரை இரக்கம் காட்டுவதே வள்ளலாரின் அழகிய பார்வை என்பதை மேற்சுட்டிய குறிப்பு உணர்த்துவதைக் கொண்டு அறியலாம்.

இவ்வகையில் வள்ளலாரின் அழகியல் பார்வை உயிரிரக்கம், ஆன்மநேய ஒருமைப்பாடு எனப் பரந்து விரிந்து செல்வதை அவரின் படைப்புகளின் வழி அறிய முடிகிறது.

ஐந்திணை எழுபது – மருதம் காட்டும் குடும்பம்

இரா. பிரேம்குமார்
அண்ணாமலை நகர்

செம்மொழித் தமிழின் தகுதியை 41 நூல்கள் பறைசாற்றி வருகின்றன. அவற்றுள் ஐந்திணை எழுபது என்னும் நூலும் ஒன்று. அந்நூலை இயற்றியவர் மூவாதியார் ஆவார். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் வரிசையில் திணைக்கு பதினான்கு பாடல்கள் விதம் அமையப் பெற்றுள்ளது. ஐந்திணை எழுபது என்றாலும் திணைக்கு 14 பாடல்கள் இடம் பெறவில்லை. முல்லை, நெய்தல் திணைக்குரிய 2 பாடல்கள் (தலா 2) கிடைக்கவில்லை. இன்று கிடைப்பவை 66 பாடல்களே இந்நூலில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்து பாடல் விநாயகர் பற்றியது ஆகும். இப்பாடலில் சிவபெருமானின் மகன் விநாயகர் என்னும் பதிவு அமையப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் காலம் கி.பி. 4 நூற்றாண்டு என்பர். தமிழர் நாட்டில் விநாயகர் வழிபாடு பிற்காலத்தில் தோன்றியது. எனவே இக்கடவுள் வாழ்த்துப்பாடல் பிற்காலத்தவர்களால் இணைத்திருக்கக் கூடும். ஐந்திணை எழுபதில் மருதத் திணை சார்ந்த பாடல்கள் பதினான்கு உள்ளன. இவற்றுள் குடும்பம் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. குடும்பம் என்று சமூகத்தின் அடிப்படை அலகுகளில் ஒன்றாகும். அதுவே தலையாய அலகாகும். குடும்பத்தின் தனிச்சிறப்பினை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சமுதாயமும் குடும்பமும்

சமுதாயம் என்பதற்கு மக்கள் திரள் மக்களின் கூட்டம் என அகராதிகள் விளக்கம் தருகின்றன. ஆனால் காலம் காலமாக ஒரு குறிப்பிட்ட தோரணைக்கு உட்பட்ட இணைவுச் செயல் அமைவில் மாறுதலுக்குறியதாகும். ஒரு குறிப்பிட்ட இடப்பின்னணியால் வாழும் ஒரு மக்கள் திரளையே சமூகம்

எனக் கூறுகிறார். சீனிச்சாமி குறிப்பிட்ட சூழலின் சமூகத்தர நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டு ஒரு தோரணைக்குட்பட்ட இணைவுச் செயல்களில் ஒருவருக்கொருவர் கலந்து இயங்குவதே சமுதாயம் எனப்பெறும். மக்களின் பலவகையானத் தொடர்புகளால் வரலாற்று முறையால் சமூக அமைப்பு தோன்றுகிறது. ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் தொகுதி சமுதாயம் (Community) எனப்படும். என்கிறது வாழ்வியல் களஞ்சியம். எனவே சமூகம் என்பது மக்கள் கூட்டம் ஒன்று கூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கிறது.

மனித இன வளர்ச்சியில் காட்டுமிராண்டி நிலையில் குடுமணமும் அநாகரிக நிலையில் இணைமணமும், நாகரிக நிலையில் ஒருதார மணமும் இடம் பெற்றிருந்தன. இணக்கும் வாழ்வின் எச்சநிலையில் வளர்ச்சியே ஒருதார மணம் ஆகும். இதுவே குடும்பம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தது. சமூக உறவுகளை வலுப்படுத்துவதில் குடும்பம் என்ற அமைப்புப் பெரும்பங்கு வகுக்கிறது. சமூக வாழ்வு ஆரம்பமாகி விரிவடைய குடும்பமே காரணமாக அமைகின்றது. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் குடும்பவாழ்வை அகத்திணையாகவும், கற்பியலாகவும் விளக்கிச் செல்கின்றன.

கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஒப்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்

என்னும் தொல்காப்பியக் கற்பியல் நூற்பா குடும்புத் தலைவிக்குரிய மாண்புகளை விளக்கி நிற்கின்றன. (அ) காமநுகர்ச்சியால் போதுமென்ற மனநிறைவு பெறல் (ஆ) பாதுகாப்புக்குரிய மக்களைப் பெற்றெடுத்தல் (இ) அறநெறியைச் சுற்றத்தாருடன் பின்பற்றல் (ஈ) ஏனையோர்க்கு எடுத்துக்காட்டாக இருந்து சிறப்பான நெறிகளைப் பயிற்றுவித்தல் போன்றவை குடும்ப வாழ்வின் நிலைகளாகும் எனத் தொல்காப்பியம் விளக்குகிறது. வாய்மொழி வள்ளுவன் தனது திருக்குறளில் உள்ள அறத்துப்பாலில் முதற்கண் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நிலம், மக்கட்பேறு போன்ற

அதிகாரங்கள் வாயிலாகக் குடும்பத்தின் இயல்புகள் இல்லாதாரின் குணநலன்கள் போன்றவற்றை எடுத்தியம்புகின்றது. "காமத்துப்பாலும் இல்லத்தின் உறவையும் உணர்வுகளையும் எடுத்துயம்புகிறது" என்னும் காமாட்சி சீனிவாசனின் கூற்று வள்ளுவத்தின் குடும்பம் பற்றிய விளக்கங்களைக் காண உதவுகின்றது. குடும்ப வாழ்வில் தலைவன் – தலைவி போன்றோரின் உறவு எத்தகையது என்பதை,

"உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு"

என்னும் குறள் விளக்கும். அதாவது உடம்புக்கும் உயிர்க்கும் என்ன தொடர்போ அத்தகையத் தொடர்புதான் தலைவனுக்கும் தலைவிக்கும் ஆகும் என்கிறார் வள்ளுவர். "ஒருவன் தன் வாழ்க்கைத் துணைவி மேற்செய்யத் தகுமனையும், பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்திணை உடையவராயினும் இதுவே இல்லறத்தின் பண்பாகும்" என்பார் பரிமேலழகர். குடும்ப வாழ்வே நல்லறம்; மேலான தருமம் ஆகும். குடும்பம் நல்வழியில் நடத்தினால் நற்பயனை அடையலாம் என்பதை,

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது பயன்.

என்னும் குறள் விளக்குகிறது.

குடும்பமும் மருதமும்

நாடோடியாக வாழ்ந்த மனிதன் நிலையாகத் தங்கி ஆற்றோரப் படுகைகளில் குடும்பமாகக் கூடி உறவுகளால் வாழ்ந்த ஒழுக்கமே மருதத் திணையாகும். மனித நாகரிகத்தின் குடும்ப உறவு மருத நிலத்தில் ஆரம்பமாயிற்று. உழவுச் சமூகமாகவும், உழைக்கும் வர்க்கமாகவும் நிலவுடைமைச் சமூகமாகவும், மருதம் உருவாயிற்று. குடும்ப உறவைத் தோற்றுவித்ததால் மருதநிலத்தவர்களான உழவர்கள் குடும்பர்கள் என்றும் குடும்பமார்கள் என்றும் பண்ணாடி என்றும் பிற்காலத்தில் (தெலுங்கர் காலத்தில்) பள்ளத்தில் சேவை செய்வதால் பள்ளர்கள் என்றும் வழங்கப்பட்டு வந்தனர். மேலும் இவர்கள் வேளாண் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மள்ளர்

குலத்தினரின் ஒவ்வொரு அசைவும் நாற்று நடுதல் முதல் அறுவடை வரை வாழ்வியலோடும் அழகியலோடும் இயற்கையாய் இயந்திருப்பதை கந்தபுராணம் - திருநாட்டுப் படலம் செய்யுள் - 6, தியாகராச லீலை - திருநாட்டுப் படலம் - செய்யுள் 98, 127, விநாயகர் புராணம் - 10, சிலப்பதிகாரம் பா 105, பா 124. திருவிளையாடற்புராணம் திருநாட்டுச் சிறப்பு செய்யுள் 25, மருதவனப் புராணம் - திருநாட்டுச் சிறப்பு - செய்யுள் 30, பெரிய புராணம் - திருமலைச்சருக்கம் - திருநாட்டுச் சிறப்பு செய்யுள் 25, பேரூர்புராணப் 1, திருநாட்டுப் படலம் செய்யுள் - 66, பள்ளுநூல்கள் சங்க நூல் போன்றவை விளக்கி நிற்கின்றன. மருதநிலத்தில் குடும்பம் குடும்பமாக வாழ்ந்த மக்களைக் குடும்பமார்கள் எனவும் அழைத்து வரலாயினர், என்றும் அ. பாலுச்சாமியின் கூற்று ஒப்பு நோக்கத்தக்கது. குடும்பம் என்றும் நிலையான நிறுவனமாக அமைவதற்கு வயலும் வயல்சார்ந்த பகுதியான மருதம் அனைத்து வசதிகளையும் வாய்ப்புகளையும் பெற்றிருந்தது.

மகன் பெற்ற தாய்

குடும்ப (திருமண வாழ்வில்) வாழ்வில் மகட்பேறு என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தலைவி மகனைப் பெற்றாள். அம்மகனுக்குத் தலைவன் ஐம்படை பூட்டிப் பெயரிட்டான். இந்நிகழ்வைத் தோழி காண்கிறாள். மகிழ்கின்றாள்; அகவாழ்வில் தோழியின் பங்கு அளப்பெரியதாகிறது. அரிய நட்புடையவராய் அன்னையாய், அமைச்சராய் விளங்கும் தோழி, தலைவியின் வாழ்வு வளம்பெறச் செய்யும் சேவை பெரிது பெரிது என்பர் நா. செயராமன். மருந்தத் தலைவனான போராற்றல் உடையவான அவன் (தலைவன்) முத்தைப் போன்ற தன் மகனை மார்பின் மீது கிடத்தித் தழுவிக் கொண்டு தன்னுடைய மேலாடை சிதையும்படி தன்மகனைத் தழுவுகின்ற செயலைக் கண்டு தோழி மகிழ்வதை,

> ஆற்றலுடைய னரும் பொறி நல்ஊரான்
> மேற்றுச் சிறிதாய காய்வஞ்சி போற்றுருவிக்
> கட்டக முத்திற் புதல்வனை மார்பின் மேற்
> பட்டம் சிதைப்ப வரும் (ஐ.எ. 41)

என்றும் பாடல் விளக்குகிறது. மேலும் புதல்வனைப் பெற்றால் தான் முதுமை

அடைந்து விட்டதாகவும், தலைவி எண்ணுகிறாள். போத்தில் கழுத்திற் புதல்வ னுணச் சான்றான் மூத்தேம் இனியாம்.... (43:1-2)

இவ்வரிகள் உணர்த்துகின்றன. தலைமகளின் இல்லறச் சிறப்பை கண்டு மகிழ்ந்த செவிலி தான்கண்ட இல்லறக் காட்சியை நற்றாய்க்கு உரைப்பதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. மருதத் தலைவனை அழகிய கண்களையுடைய மகன் கால்களால் மிதித்துச் சிதைத்துக் கொண்டிருக்க மகவுப் பெற்றதால் தளர்ந்த மார்பின் முனையைத் தம் கைகளால் விரும்பி நெருடி மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்த தலைவன் - தலைவி இல்லற வாழ்வின் இன்ப நிகழ்வை,

தேங்கமழ் பொய்கை அகவயல் ஊரனைப்
பூங்கண் புதல்வன் மிதித்துழக்க – வீங்குத்
தளர்முலை பாராட்டி என்னுடைய பாவை
வளர்முலைக் கண்நெமுக்கு வார் (45)

என்னும் பாடல்வழி அறியமுடிகிறது. குடும்ப வாழ்வின் இல்லறச் சுகத்தையும் அன்பு வாழ்வையும் ஐந்திணை எழுபது மருதத் திணைப்பாடல் அழகுற எடுத்துரைப்பது இலக்கியச் சிறப்பு மட்டுமல்ல இல்லறத்தின் மாண்பும் கூட.

முடிவு

- சமுதாயத்தின் அடிப்படை அலகாகக் குடும்பம் அமைந்துள்ளது.
- சமுதாயத்தின் உறவுகள் வலுப்பெறக் குடும்ப அமைப்பு உதவுகின்றது.
- மருதத்தின் அமைப்பு குடும்பத் தோற்றத்திற்கும், நிலையான மக்களின் வாழ்விற்கும் அடித்தளமாகிறது.
- குடும்ப வாழ்வில் மகப்பேறு முக்கியத்துவமாகப் பார்க்கப்படுகிறது.
- குடும்ப வாழ்வில் தலைவன் தலைவி உடலும் உயிராகவும், அன்பாய்க் குடும்பமும் நடத்துவதாகவும் மருதத்திணைப் பாடல்கள் விளக்குகின்றன.

'அறன்இல்' அன்னை

சு. மகேஸ்வரி
அண்ணாமலை நகர்

முன்னுரை

சமூகம் பெண்ணினும் ஆணுக்கே மிகுந்த முக்கியத்துவத்தைத் தருகின்றது. இருப்பினும் பிள்ளை வளர்ப்பு (ஒழுக்கம் சார்ந்து) என்ற நிலையில் ஆண் வளர்ப்பினும் பெண் வளர்ப்பே முதன்மைப்படுத்திப் பேசப்படுகின்றது. ஆண்கள் ஒழுக்கக் குறைவான செயல்களில் ஈடுபடின் அதனைப் பெரிதுபடுத்தாத சமூகம், பெண் சிறு தவறு புரியினும் அதனிமித்தம் அவளையும், அவள் வளர்ப்பையும் குறை கூறி அவள் சார்ந்த குடும்பத்தை இழிவுபடுத்துகின்றது. இதனாலேயே பிள்ளை வளர்ப்பில் பெரும்பங்கு எடுத்துக் கொள்ளும் தாய், தனது மகள் எவ்வித ஒழுக்கக் குறைவான செயல்களிலும் ஈடுபடாத வண்ணம் கண்டிப்போடு அவளை அணுக வேண்டிய சமூக நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றாள். இவ்வணுகுமுறை அம்மகளது களவு வாழ்விற்குத் தடையாக அமையும் பொழுது தாய் அவளுக்குப் பகைவர் போன்று ஆகின்றாள். உலக வழக்கில் இந்நிலைகள் பெற்ற தாய்க்குரியதாக இருப்பினும், இலக்கிய வழக்கில் (சங்க இலக்கியம்) இவை வளர்ப்புத் தாய்க்குரியதாக (செவிலி) உள்ளன. இதனைத் தோழியும் தலைவியும் அவளை 'அறன் இல் அன்னை' என்று சுட்டுவதனைக் கொண்டும் அறியலாம். சங்க இலக்கியத்தில் இச்சொல் இடம்பெறும் சூழல் மற்றும் அது குறித்த செய்திகளையே இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

1. சங்க இலக்கியத்தில் இல்

இல்லாது, இல்லாத எனப்பொருள்படும் இல் எனும் சொல் சங்க அக இலக்கியத்துள் (எட்டுத் தொகை) 176 இடங்களில் பயின்று வருகின்றது. இச்சொல் அறன் இல், மாசுஇல், நிறைஇல் என்பன போன்று சொற்களின் பின் அடையாக வருகின்றது.

இல் எனும் சொல்லின் முன் 82 சொற்கள் சங்க அகப் பாடல்களில் பயின்று வந்துள்ளன. அச்சொற்கள்,

அறன், பண்பு, மாசு, மரன், வறன், நயன், நார், நெஞ்சு, நிழல், உரும்பு, ஒன்று, போக்கு, நீர், நிறை, ஆள், யாரும், அவர், முனிவு, புரை, இலை, மதன், துனி, விளிவு, தா, ஆசு, உலைவு, அரண், பூ, இல்லோர், தீது, பிரிவு, தாய், கேடு, பொத்து, கன்று, வசை, பாடு, பசி, களவு, மறு, மை, தவல், நின்றுது, எல்லை, மாண்பு, அன்பு, அருள், பயம், தொலைவு, ஊறு, அசைவு, தாழ்வு, உள், அழிவு, கூதிர், உரு, நல், மகடு, வெளிறு, இடன், தவிர்வு, துணிவு, அமைவோர், ஊண், துணை, மழை, நாண், ஈரம், உலகத்து திறன், புகர், புலம்பு, பொய் ஆனம், தணிவு, களைஞர், கொள்கை, அடக்கம், ஐயம், செய்வது, ஒப்பர், கண்டவர் என்பனவாகும். இச்சொற்களுள் அறன் இல், நீர் இல், என அறன், நீர் எனும் சொற்களே இல் எனும் சொல்லோடு அதிகமாகப் பதினொரு இடங்களில் சங்கப் பாடல்களுள் பயின்று வந்துள்ளன.

'அறன் இல்' எனும் சொல்

'அறன் இல்' எனும் சொல் அன்னை, யாய் எனும் சொற்களோடு சேர்ந்து அறன் இல் அன்னை, அறன் இல் யாய் என எட்டுப் பாடல்களிலும் (அன்னை 3 + யாய் 5), முறையே கோள்நர், பால், வேந்தன் எனும் சொற்களோடு ஒரு பாடலிலும் சங்க அக இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது. அக இலக்கியங்களான நற்றிணை (63, 145, 376), குறுந்தொகை (244, 268, 267) அகநானூறு (60, 109, 302) ஐங்குறுநூறு (376, 385) ஆகியவற்றில் இச்சொல் பயின்று வருகின்றது.

அகமாந்தர் கூற்றில் அறன் இல்

அறன் இல் அன்னை என்ற ஆட்சி 7 பாடல்களில் (63, 145, 376, 244, 262, 60, 302) தாயைச் சுட்டுவதாகத் தோழி கூற்றிலும் ஒரு பாடலில் (305) தலைவி கூற்றிலும் அமைந்துள்ளன. செவிலி கூற்றில் ஒரு பாடலில் இச்சொல் அறன் இல் பாலே என விதியைச் சுட்டுவதாக உள்ளது (376). தலைவன் கூற்றில், அறன் இல் கோள்நர், அறன் இல் வேந்தன் என கூற்றுவன் மற்றும் அரசனைச் சுட்டுவதாக இரு பாடல்களில் (267 - 109) பயின்று வந்துள்ளது.

அறன் இல்லாத எனும் சொற்றொடர்

அறம் இல்லாத என்பதை உணர்த்தும் அறன் இல் எனும் சொல்லன்றி, அறனிலாளன், அறனும் அன்றே, அறன் இன்று, அறன்இல் எனும் சொற்றொடர்களும் சங்க அக இலக்கியத்துள் 14 இடங்களில் பயின்று வந்துள்ளன. இச்சொற்கள் தலைவன், தலைவியின் ஊர், அஃறிணைகள் குறித்து செவிலி, தோழி மற்றும் தலைவியால் சுட்டப்பட்டுள்ளன.

தலைவன்

1. அறமில்லாது தன்னிடமிருந்து தன் மகளைப் பிரித்து உடன்போக்கில் அழைத்துச் சென்றதற்காகச் செவிலியால் தலைவன் அறனிலாளன் (அகம் 207 - 209) எனச் சுட்டப்படுகின்றான்.

2. தலைவன் களவொழுக்கத்தில் வரைவு மேற்கொள்ளாது, களவு நீட்டித்தமையால் தலைவி மற்றும் தோழியால் அறனிலாளன் (அறநெறிப்படி நடக்காத தலைவன்) (நற். 275, ஐங். 118, 129, கலி. 86) எனச் சுட்டப்படுகின்றான்.

3. தலைமக்களின் களவொழுக்கம் அறிந்த ஊரார் தலைவனை (நற். 227) அறனிலாளன் என்கின்றனர்.

4. ஒரு பெண்ணோடு களவொழுக்கத்தில் ஈடுபட்டு, அவளை அறியேன் என்ற ஒருவனுக்கு, உண்மையறிந்து ஊரார் அவனுக்கு தண்டனை கொடுத்ததைச் சுட்டித் தோழி அறனிலாளன் (அகம். 256) எனக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

தலைவியின் ஊர், அலர்

1. அலர் தூற்றுகின்ற ஊரினையும் (நற். 63) ஊரிலுள்ளோர் கூறும் பழிச் சொற்களையும் (கலி. 3) அறனன்று எனத் தோழி சுட்டுகின்றாள்.

2. தலைவியைத் தோழிகளோடு விளையாட விடாது அவளை இற்செறித்தல் அறமற்ற செயல் (நற். 68) என்று தோழி கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

அஃறிணைகள்

1. தலைவியை விட்டுத் தலைவன் பொருள் வயிற் பிரிந்து செல்கின்றான். அந்நிலையில், அவன் செல்லும் வழியில் உள்ள விலங்குகள் (ஐங். 332) அவனைத் தடுக்க வில்லையென அவைகளையும், அவன் பிரிவால் தான் உற்ற நிலையை அவனுக்குத் தெரிவிக்கவில்லையென வண்டையும் (நற். 277), அவன் இல்லாத பொழுது வருத்தும் வாடைக்காற்றினையும் (அகம் 225), தலைவி அறமற்றவை, அறநினைவு இல்லாதவை எனப் பழி தூற்றுகின்றாள். இவ்வாறு அறம் இல்லாத எனும் சொற்றொடர் மேற்கண்ட சூழல்களில் சங்கப் பாடல்களுள் பயின்று வந்துள்ளது.

களவில் செவிலியின் பங்கு

பிறந்தது முதலே தலைவியைப் பாராட்டியும், பண்பு அறிவுறுத்தியும் வளர்ப்பவள் செவிலியாவாள். தலைவியின் அசைவுகள் அனைத்தையும் ஆய்வுக்கண் கொண்டு நோக்கு பவளும் அவளேயாவாள். அதனாலேயே, களவு மேற்கொள்ளும் தலைவியும் அவளுக்கு உற்ற துணையாக இருக்கும் தோழியும் களவின் பொருட்டு ஊருக்கும் குடும்பத்திற்கும் அஞ்சுவதை விடச் செவிலிக்கே மிகுதியாக அஞ்சுகின்றனர். அதனை அவர்கள் களவினை மறைக்க மேற்கொள்ளும் முயற்சிகளிலிருந்தும், தாயச்சம் கூறித் தலைவனை வரைவு கடாவ வேண்டுவதிலிருந்தும் அறியலாம்.

ஆய்பெரும் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாய் எனப் படுவோள் செவிலி ஆகும் (தொல். களவு. 122)

எனத் தொல்காப்பியர் சுட்டுவதும் செவிலியின் சிறப்பு நோக்கியேயாகும்.

இந்நூற்பாவிற்குப் பொருளுரைக்கும் இளம்பூரணர் "நல்ல பெரிய சிறப்பினையுடைய அறிதற்கரிய மறைப்பொருள் யாவற்றையுங் கூறும் கடப்பாடுடையளாதலின் தாய் எனப் படுவாள் செவிலியாகும் என்றவாறு" என்பர். இது குறித்துக் கூறும் நச்சினார்க்கினியர், ஈன்ற தாயானுங் களவின்கட் சிறந்தாள் இவளென்றார் எனத் தொல்காப்பியரின் கருத்தை உணர்த்துவார். அவ்வாறே இந்நூற்பா குறித்து தமது உரைவளத்தில், ஆராய்ந்தற்கரிய

பெருஞ்சிறப்பினையுடைய அருமை வாய்ந்ததாய் உலகத்தார் அறியாது மறைவில் நிகழும் அன்புரிமை ஒழுகலாற்றினைக் கூறுதற்குரிமையுடையவளாதலின் (தலைவி தோழி என்னும் இருவராலும்) தாய் எனச் சிறப்பாகக் கூறப்படுபவள் செவிலித்தாய் ஆவாள் எனக் குறிப்பிடுவர். க. வெள்ளைவாரணன் இவர்கள் கருத்திலிருந்து தோழி மற்றும் தலைவியால் அறன்இல் அன்னை என்று கூறப்படுபவள் செவிலியேயாவாள் என்பது பெறப்படும்.

இத்தொடர் பயின்றுவரும் துறை

அறன் இல் அன்னை எனும் சொற்றொடர் தோழி கூற்றில் தலைவன் சிறைப்புறமிருக்க தோழி இற்செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது எனும் துறையிலேயே மிகுதியும் பயின்று வந்துள்ளது. தலைவி கூற்றில் உடன்போக்குத் துறையில் பயின்று வந்துள்ளது.

இத்தொடருக்கான பொருள்

அறன்இல் அன்னை எனும் சொற்றொடருக்குப் பொருளுரைக்கும் உரையாசிரியர்கள் சூழலுக்குத் தக்கவாறு,

1. அறநினைவு இல்லாத தாய்
2. அறன் இல்லாத நெஞ்சையுடைய தாய்
3. அறப் பண்பு இல்லாத தாய்
4. அறமற்ற தாய்
5. அறநெறியில் நில்லாத தாய்
6. அற உணர்வு இல்லாத தாய்

எனப் பொருளுரைக்கின்றனர்.

தோழி கூற்றில் அறன் இல் அன்னை

ஒருவர் தமக்கு விருப்பமான செயலை மேற்கொள்கையில் பிறர் அச்செயலைத் தடுத்தோ (அ) அதற்கு இடையூறோ ஏற்படுத்தின் அவர் அந்நபர் மீது கோபம் கொள்ளுதலும், அவரை இழித்துரைத்தலும் மனித இயல்பாகும். இம்மன இயல்பைச் சங்கப் பாடல்களும் பதிவு செய்துள்ளன. தலைவியது

களவொழுக்கத்திற்கு இடையூறாக இருக்கும் அன்னையைத் தோழி தலைவியின் நிமித்தம் அறன் இல் அன்னை என இழித்துரைத்துக் கூறுவதிலிருந்தும் அதனை அறிய முடிகின்றது. தோழி கூற்றில், அறன் இல் அன்னை எனும் சொற்றொடர் பயின்றுவரும் நிலைகளாவன.

1. ஊரின்கண் எழுந்த அலரால் தாய் தலைவியைத் துன்புறுத்தினாள். இதனால் தோழி, அறமில்லாத நெஞ்சையுடைய தாய் தனித்துப் புலம்புமாறு அவளை விட்டுப் பிரிந்து தலைவனோடு உடன்போக்கு மேற்கொள்வாயாக என்று தலைவியிடம்,

ஊஉர் அலர் எழ, சேரி கல்லெனை
ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை
தானே இருக்க தன்மனை (குறு. 62)

கூறும் நிலையிலும்,

2. சிறு வயதில் தோழிகளோடு விளையாடினும் மேனி வருந்தும் என அறப்பண்பு இல்லாத தாய் சினங்கொள்வாள். அத்தகையவள் நின் களவொழுக்கம் அறியவரின் உன்னை இற்செறிப்பாள் என்று கூறும் நிலையிலும் (அகம். 60).

3. களவினை அறிந்த தாய், அதனிமித்தம் தலைவியைத் தினைப் புனம் காக்கப் போகாமல் தடுத்து விடுகின்றாள். அதனால் அறப்பண்பு இல்லாத தாய் நம்மைத் தினைப்புனம் அனுப்ப மாட்டாள் போலும் எனத் தலைவியிடம் அறநெறியில் நில்லாத அன்னை எம்மை இற்செறித்ததை அறிந்தாயோ எனக் கிளியிடமும் கூறும் நிலையிலும் (அகம். 320, நற். 376).

4. அறமில்லாத அன்னை இற்செறித்ததனால் தலைவியால் தலைவனை சந்திக்கமுடியாத நிலை ஏற்பட்டு, அதனால் அவளுக்குப் பசலை படர்ந்தது என்று கூறும் நிலையிலும் (நற். 63)

5. தலைவனுடன் இருந்த தொடர்பு நீங்கிய நிலையிலும் அறனில்லாத அன்னை, அவன் எங்குள்ளான் என்று வினவுகின்றாள் என்று தலைவியிடம் கூறும் நிலையிலும் (நற். 145).

சங்கப் பாடல்களில் இத்தொடர் பயின்று வந்துள்ளது. இதிலிருந்து தாயை அறமில்லாதவள் என்று கூறுவதற்கு இற்செறிப்பே மிக முக்கியக் காரணமாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. செவிலியானவள் தோழியின் தாயாவாள். இருப்பினும் தோழி தன் தோழியின் (தலைவி) நிமித்தம், தோழியின் காதலின் நிமித்தம் தன் அன்னையையே அறன் இல் அன்னை என்று இழித்துரைக்கின்றாள். இதிலிருந்து அவள் தாயினும் தலைவி மீது கொண்டுள்ள அன்பினை அறிய முடிகின்றது.

தலைவி கூற்றில் அறன்இல் அன்னை

தலைவி, தன்னை வளர்த்த செவிலித் தாயை ஒரு பாடலில் மட்டுமே, அறன் இல் அன்னை என்று குறிப்பிடுகின்றாள்.

நல்தோள் நயந்து பாராட்டி

எற்கெடுத்து இருந்த அறன்இல் யாய்க்கே (ஐங். 385)

என்பது அப்பாடலடியாகும். தலைவி உடன்போக்கு செல்லும் நிலையில், நான் தலைவனோடு செல்வதை என்னைப் பாராட்டி வளர்த்து, நான் தலைவனை அடைவதற்குப் பல தடைகளை ஏற்படுத்திய அறமில்லாத அன்னையிடம் தெரிவியுங்கள் என்று கூறுவதாக இப்பாடலடிகள் அமைந்துள்ளன. இதிலிருந்து தாய் தலைவியின் களவினை அறிந்து அவள் களவிற்கு உறுதுணையாக இருந்து அவளைத் தலைவனோடு மணவாழ்வில் கூட்டி வையாமல், தடையாக இருந்து அவளைத் துன்புறுத்தியதாலேயே அவள் அன்னையை அறன் இல் அன்னை என்கிறாள் என்பதை உணர முடிகின்றது.

மேற்கண்டவாறு தலைவி மற்றும் தோழியால் களவிற்கு இடையூறாக இருக்கும் நிலையில் அன்னை அறமில்லாதவளாகச் சுட்டப்படுகின்றாள் என்பது பெறப்படுகின்றன.

முடிவுரை

சங்க அகப்பாடல்களுள் இல் எனும் சொல்லின் முன் அறன் எனும் சொல்லே அதிகமுறை பயின்று வந்துள்ளது. இச்சொல் அன்னை, தலைவன், அரசன், ஊழ், அலர், ஊர், அஃறிணைகள் குறித்து வழங்கப்பட்டுள்ளது.

இச்சொல்லினைக் கூறுபவர்களாக தோழி, தலைவி, தாய், தலைவன் ஆகியோர் அமைகின்றனர். தலைவி மற்றும் தோழியால் அன்னை அறன் இல் அன்னை என்று சாடப்படுகின்றாள். இதற்கு முதன்மையான காரணமாக இற்செறிப்பு அமைகின்றது. இற்செறிப்பு தலைவனைச் சந்திப்பதற்குத் தடையாகவும், இடையூறாகவும் அமைவதாலேயே தலைவி மற்றும் தோழியோ அன்னை சாடப்படுகின்றாள் என்பது பெறப்படுகின்றது. மேலும் இச்சொல்லின் மூலம் தோழி தாயினும் தலைவி மீது வைத்துள்ள அன்பு வெளிப்படுகின்றது.

வாசகர் வாசகம் (2)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர்,

அய்யா அவர்களுக்கு வணக்கம். தமிழ் மொழியிலிருந்து பிறந்தவைதான் தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறியுள்ளதை பட்டதும் போதும் கட்டுரை மெய்ம்மைப் படுத்திற்று. கொச்சை வடிவங்களை இலக்கிய வழக்காக்குதல் மொழி வளர்ச்சி ஆவாது. வேளாண் வளர்ச்சியுமாகாது. மொழித் தளர்ச்சியாகவே முடியும் என்னும் பன்னீர் செல்வனாரின் கருத்து நல்ல முத்தாய்ப்பு. முறையானப் பள்ளிக் கல்வியினைப் பெறா நிலையிலும் வள்ளலாரின் இலக்கியப் புலமை அகவல் மாலை, வெண்பா, அந்தாதி போன்ற செய்யுள் வகைகளில் பளிச்சிடுகின்றன. சென்ற நூற்றாண்டில் தமிழ்க் கவிதைக்கு தெளிவும் எளிமையும் உருக்கமும் தந்து தமிழிலக்கிய வளர்ச்சியில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை அவருக்குண்டு என்பது மறுக்கவொண்ணாத உண்மை.

பரஞ்சோதியார் வடித்துள்ள திருவிளையாடற் புராணம் பற்றி மட்டுமே அறிந்திருந்த நமக்கு பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பார் ஒரு திருவிளையாடற் புராணம் படைத்துள்ளார் என்பதை முனைவர் ஆறுமுகனார் அறிமுகப்படுத்தி விளக்கியுள்ளதாக மணிவாசகர்க்கும் பரஞ்சோதியாருக்கும் இருந்த கருத்தொற்றுமையையும் ஆசிரியர் நன்கு புலப்படுத்தியுள்ளார். திருவள்ளுவர் பெருந்தகை கையாண்டுள்ள பட்டடை எனும் சொல்லை ஆய்ந்து, அலசி ஐம் பொறியார் பொருள் புதைய விளக்கியுள்ள பாங்கு சிந்தனைக்கு அரிய விருந்து.

அன்புடன்,

புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி

தொழிற்கல்வி

ஆறுவிரல் ஐம்பொறி, வீரசோழபுரம்

உடையில் லார்க்கே உடையைக் கொடுப்பதும்
உணவில் லார்க்கே உணவைக் கொடுப்பதும்
நீரில் லார்க்கே நீரைக் கொடுப்பதும்
அறமென ஆன்றோர் அன்பாய் உரைத்தனர்
அந்த அறத்தினும் அரியதோர் அறமது
பூமியில் உள்ளது. புனித மானது.
சிறுதொழில் ஒன்றைச் சீர்மிகு இடத்தில்
கற்பிக் கும்செயல் கலைமிகு அறமே.
கற்றவர் அந்தக் கைத்தொழில் செய்துதன்
அற்புத வாழ்வில் அரும்பசி களைவார்.
பலர்வந் தவரிடம் பாடம் கேட்பார்.
அகல்விளக் கொன்று ஆயிரம் விளக்கை
ஏற்றி ஒளிதரும் இயல்பினைப் போல
சிறுதொழில் உலகில் சிறப்புடன் பரவும்
உதவியால் பெற்ற ஒருபிடி சோறு
ஒருநா ளைக்குள் ஓடிடும். ஆனால்
கற்ற கைத்தொழில் காலம் முழுதும்
வழிவழி வந்து வறுமையைப் போக்கும்
பொருளைக் கொடுக்கும் புண்ணிய அறத்தினும்
கற்பிக் கும்அறம் கடலினும் பெரிதே
எறும்புகள் முதலாய் யானைகள் ஈறாய்
உயிர்கள் எல்லாம் உழைப்பதைப் பார்க்கிறோம்.
எல்லா இடத்திலும் இயங்கும் வேலையை
இல்லைஎன் போரை எள்ளி நகைக்கலாம்.
வேலையே இல்லா வீணரைப் பூமி
அசையாச் சவமென அசைந்து கூறிடும்.
உழைப்பவர் அனைவரும் உயர்ந்தோர் ஆவார்.
உழைக்கா தவரே உலகில் தாழ்ந்தோர்.
எந்தத் தொழிலையும் ஏற்றுக் கொண்டால்
எல்லோ ருக்கும் இன்பம். இன்பம்.

இலக்கியங்களில் சத்தி வழிபாடு (இயல் – 4)

கா. சந்திரமோகன்

வாழ்கின்ற மாந்தருக்கு வரம்பற்ற மகிழ்வினை வழங்க வல்லன இலக்கியங்கள்.

பாருலக மக்களின் பல்வேறு குறிக்கோள்களை இலக்குகளை – எண்ணத்தில் தாங்கிய சிந்தனைச் சிற்பிகளால் சீரிய முறையில் செய்யப்படுவதால் இலக்கியங்கள் எனப் பெயர் பெற்றன.

இலக்கினைக் கொண்டது இலக்கியம். அது இரண்டு வகைப்படும். உரைநடை இலக்கியம், செய்யுள் இலக்கியம்.

உரைநடை இலக்கியத்தை விடச் செய்யுள் இலக்கியம் சிறப்புடையதென்பர்.

பொருளின் பொலிவும் சொல்லின் திறமும்
தொடையும் தொடையின் விகற்பமும் துணை
உருவகம் முதலாம் அலங்காரங்களை
உட்கொண் டோசைப் பொலிவுடைத் தாகி
உய்த்துணர் வோர்தம் உள்ளங் கட்கு
மாக்கடல் அமிழ் தெனப் படுவது மதுரகவி

என்று சொற்பொருள் விளக்கம் தருகிறது பிங்கல நிகண்டு.

இலக்கியம் ஒவ்வொரு தேசத்திலும் வாழும் மாந்தரின் இயல்புக்கு ஏற்றாற் போல் அமையும். காலத்திற்குக் காலம் மாற்றம் கண்டு வளர்ச்சி அடையும்.

மனிதன் அறிவைப் பயன்படுத்தி வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே சமயம் என்ற கோட்பாடும் உடன் வளர்ந்து வந்துள்ளது. வரலாற்றுக் காலத்துக்கும் முன்பே தோன்றி வளமை குன்றாது இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதுவும், இலக்கியங்களில் பெரிதும் இடம் பெற்றும், வாழ்க்கை

நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாக சமயமும், இலக்கியமும் இரண்டறக் கலந்துள்ளன.

பழந்தமிழ் இலக்கியங்கள்

தமிழ் இலக்கியங்களில் மிகப் பழமையானவை சங்க இலக்கியங்களே. முச்சங்கங்களின் காலத்தே தோன்றிய இலக்கியங்களைச் சங்க இலக்கியம் என்கிறோம். சங்க இலக்கியங்கள் என்று இப்போது வழங்குபவை பெரும்பாலும் கடைச்சங்க இலக்கியங்களே. தலைச்சங்க, இடைச்சங்கப் பாடல்கள் சிலவும் இவற்றுள் சேர்ந்தன.

சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் என இரு பிரிவுகளை உள்ளடக்கியது. பாட்டுத் தொகையும் சேர்த்து சங்க இலக்கிய நூல்கள் பதினெட்டு. இவையே மிகப் பழமையான தமிழ் இலக்கியங்கள்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் இந்து சமயத் தெய்வ வழிபாடுகள் பற்றி விரிவான விளக்கங்கள் இடம் பெறுகின்றன.

சங்க இலக்கிய அறம்

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தொடர் இன்று பலரும் அறிந்தது. ஆனால் அது எங்கே சொல்லப்பட்டுள்ளது என்பது பலரும் அறியாதது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா (புறம். 192)

இதனுள் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவான அறம்; பொது உண்மை. நீர் வழிப்படூஉம் புணை – மிதவை போல ஊழ்வழிப்படூஉம் உயிர் என்பது இந்து சமயத்திற்கே உரிய சிறப்பு அறம்; சிறப்புண்மை; வினைக் கொள்கை ஊழ் அறம்; பொது உண்மை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியது. முச்சங்க காலத்தும் சிறந்தோங்கி இலக்கியத்திற்கு வழிவகுத்து நின்றன.

தமிழ்ச் சங்கங்கள் மூன்றும் தோன்றி வளர்ந்த வரலாறும், இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் எழுந்த வரலாறும், தெய்வீக நிகழ்ச்சிகள், அளவைக்கு ஒவ்வாத காலவரையறைகள் ஆகியவை கலந்துள்ளன என்பது உண்மை.

பழைய இலக்கியச் சான்றுகள்

1. இமிழ்குரல் முரச மூன்றுட னாளுந்
   தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே (புறம்)
2. தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் - மதுரை (சிலம்பு)
3. தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய் (மணிமேகலை)

பல்லவர் கால இலக்கியச் சான்றுகள்

சங்கத் தமிழ் - (திருப்பாவை - 30)
சங்க முகத் தமிழ் - திருக்கோவையார்

இச்சங்க காலத்துத் தோன்றிய நூல்கள் யாவும் சங்க இலக்கியங்களாகக் கருதப்பட்டு வந்தன.

சமண, பௌத்த சமயங்களின் வளர்ச்சியில் ஒன்றோடொன்று போட்டியிட்டு மக்களின் கருத்தைச் சமயத் துறையில் ஈர்த்துக் கொண்டிருந்த காலத்தில், பத்தி இயக்கம் தோன்றியது. அச்சமயத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் கடும் நோன்புகளுக்கு முதலிடம் கொடுக்காமல் அன்புக்கே முதலிடம் கொடுத்தனர். கடவுளிடத்தில் மனிதன் காட்ட வேண்டியது அன்பு ஒன்றுதான் என்னும் தூய பக்தி நெறியை வளர்த்தனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முன்பு இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையும் தோன்றி மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளைக் காட்டியதோடு இறையன்பின் மேன்மைக்கும் சிறப்பிடம் தந்துள்ளது. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதன் மூலம் மனிதத் தவறுகள் இறைவனால் தண்டிக்கப்படும் என்பதைத் தெளிவாகக் காட்டியது.

பக்தி

உலகங்களனைத்திற்கும் ஆதியான இறைவன் மீது மனிதனுக்கு எழுகின்ற ஈர்ப்பே பக்தியாகும். இவ்வகை ஈர்ப்பு மனிதனிடத்து மட்டும் காணப்படுகிறது என்பது பெரும்பாலருடைய கொள்கை. ஆராய்ந்து நோக்கும் போது அத்தகைய ஈர்ப்பு இயற்கை முழுவதினும் காணப்படுகிறது.

பாமர மக்கள் பல்வேறு கிராமத் தெய்வங்களை வழிபட்டுக் கொண்டிருந்த பண்டைக் காலத்தில் சமயச் சிந்தனையாளர்கள் பரம் பொருள்

பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். அதன் விளைவாகச் சமயத் தத்துவங்கள் பலவற்றை உருவாக்கினார்.

சிவ வழிபாட்டிற்கும் சத்தி வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கண்டனர். சிவனை பேரண்டத்தின் ஆத்மாவாகவும், தாய்த் தெய்வம் எனப்படும் சத்தியைப் பேரண்டத்தின் ஆற்றலாகவும் கொண்டனர். சத்தியையும் சிவனையும் உருவகப்படுத்திக் காட்டிய போது சிவனை வலது பாதியாகவும், சத்தியை இடது பாதியாகவும் காட்டினர். இதுவே நமது சமயத்தின் மெய்ஞானக் கருத்தின் அடிப்படையாக வடிவம் பெற்றது. இம் மெய் ஞானத்திற்குள் விஞ்ஞானம் அடங்கியிருந்தது.

இக்காலத்தில் பெண்ணுக்குச் சம உரிமை கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆதி காலத்திலேயே அர்த்தநாரீஸ்வரனாகி – உமையொரு பாகனாகி பெண்ணுக்குச் சம உரிமை தந்து விட்டார்.

அறிவும் விளைவுமாக, சிவமும் சத்தியுமாக, அப்பனும் அம்மையுமாகப் பிரிவற்றையாது ஏற்றத் தாழ்வற்று இணைந்த நிலைமையை உலகிற்குக் காட்டத்தான் அம்மையப்பர் வழிபாடு உலகில் இடம் பெற்றது. அம்மையப்பர் வழிபாடு தோன்றுவதற்கு முன்பே பொதுவாக உலகில், சிறப்பாகத் திராவிடப் பழங்குடி மக்களிடம் அன்னை வழிபாடு தோன்றிவிட்டதாக மோனியர் வில்லியம்ஸ், மார்ஷல் போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தாயைத் தெய்வமாக வழிபடும் முறை இன்று, நேற்று ஏற்பட்டதன்று. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலத்து என்பதறிவோம்.

அன்னை வழிபாடு தென்னகம் முழுமையிலும் காணப்படுகிறது என்பதனை இன்னும் ஒருவகையாகக் காணலாம். தென்னக மக்கட்குக் குலதெய்வங்களாகப் பெண் தெய்வங்களே கொற்றவை வழிபாடு, காளி வழிபாடு, சத்தி வழிபாடு, நாக வழிபாடு, சமணர்களின் பத்மாவதி வழிபாடு, புத்தர்களின் தாராதேவி வழிபாடு என்று மாற்றங்களைப் பெற்றிருக்கக் கூடும் என எண்ண இடம் உண்டு.

சத்தி வழிபாடு சங்க காலம் தொட்டுத் தமிழ் நாட்டில் நிகழ்ந்து வருவதற்குச் சங்க இலக்கியங்கள் தொடங்கி பாரதி, பாரதிதாசன் வரை உள்ள இலக்கியங்கள் சான்றாய் அமைகின்றன. அன்னையாம் பேராற்றலைச் சரணடைந்தால் அகமும் புறமும் உயரும் என்ற நம்பிக்கை இருந்திருக்கின்றது என்பது அவை காட்டும் உண்மை.

சத்தி விளக்கம்

பாரதியார்

ஆதிப் பரம் பொருளின் ஊக்கம் –அதை
அன்னை எனப் பணிதல் ஆக்கம்

சிவத்தினுள் சத்தியும், சத்தியினுள் சிவமும் கலந்து பெருந்தொடர்புற்று விளங்குகின்றன. எந்நாளும் சிவனை உணர்தல், அறிதல் அருமையுடையது. ஆனால் சத்தியின் அருளை உணர்தலும் அறிதலும் எளிது. எனவேதான் வழிபாடு, சத்தி வழிபாட்டில் தொடங்கி இருத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர்.

உலகம் தழுவிய இச்சத்தி வழிபாடானது, தமிழகத்திலும் குறிப்பாக கொங்கு நாட்டில் சிவத் திருத்தலங்களில் அன்னை சத்தியானவள் சிவனோடு இரண்டறக் கலந்து அருள்புரிகிறாள். அத்திருத்தலங்கள் கொங்கு வைப்புத் தலங்களாகப் போற்றப்படுகின்றன. இலக்கியங்களிலும் இவை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சத்தியை வழிபடுவது சாக்தம்

ஆதிசங்கரர் வேதங்கள் தங்கள் சிரசுக்கு ஆபரணமாக எந்த உன் பாதங்களைத் தாங்குகின்றனவோ அந்தப் பாதங்களை என் சிரசிலும் வைப்பாய் தாயே என வேண்டுகிறார்.

கோநோபநிசத் தேவர்கள் அகம்பாவம் அடைந்த போது அதைப் போக்கி அவர்களுக்கு ஞானம் தருவதற்காக அம்பிகை தோன்றினாள் என்று கூறுகிறது.

அம்பாளை வணங்கினால் அகம்பாவம் அழியும். பாசமும் பந்தமும் பட்டென மறையும் ஞான விளக்கு நன்றாய் எரியும்.

சாக்த மந்திரம்

சத்தியின் வழிபாட்டை மந்திர சாஸ்திரங்கள் விரிவாகக் கூறுகின்றன. பிரபஞ்சத்தை இயக்கும் கண்காணாததோர் தெய்வீக ஆற்றலே சத்தியாக உருவாக்கப்பட்டுள்ளது. மனிதன் தன்னுள் உறங்கிக் கிடக்கும் மாண்பைப் பொறுமையின் சிகரத்தை நின்ற கடலை தியாக மழையை ஒருங்கே திரட்டி

உருக் கொடுத்து சத்தி வழிபாடு என்று ஆதிசங்கரப் பகவத் பாதர் அமைத்துள்ளார். அதுதான் சாக்தம் என்று கூறப்படுகிறது.

ஆதியின் முதல் தோற்றமாகிய தாய்த் தெய்வமே; பின்னாளில் சத்தியின் தோற்றமாக உருப் பெற்றது. தாய் இருந்தால் தான் பிள்ளை நன்றாக வளரும். இதனால் தான் மகான்கள் எல்லோரும் தெய்வத்தை தாய் வடிவிலே கருணையோடு விளங்கும் பராசக்தி சகன் மாதாவாக வணங்குகிறார்கள்.

பொல்லாத பிள்ளையெனில் தாய் தள்ளல் நீதமோ
புகலிடம் பிரிது முண்யோ?

என்று தாயுமானாரும் கூறுகிறார்.

சத்தி - வழிபாடு

இப்பிரபஞ்சத்தின் தோற்று வாயிலாக மனிதனை உருவாக்க வல்லதாகத் தாய்மை அமைகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தாய்மை

மாத்ரு தேவோ பவ என்பது உபநிடதக் கட்டளை. இதையே,

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்ததுவே என்றும்,
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தாயினும் சிறந்த கோயிலுமில்லை" என்றும் கூறுவார்கள்.

தாய் தான் முதல் தெய்வம்; தாய் என்றால் குழந்தையைப் பெற்றால் தான் தாய் என்பத அல்ல. தாய்க்கு உரிய குணாதிசியங்கள் பொருந்திய எவருமே தாய் தான். அதனால் தான் தாயெல்லாம் அனைய ஓர் தந்தையே என்று பரமேச்வரனைப் போற்றுகிறோம்.

வழிபாடு

சத்தி வழிபாடு உலகத்திலேயே மிகப் பழமையானது. ஆதிகால சமுதாய வளர்ச்சியில் வேறெச் சத்தியையும் விடத் தாய்மை வழிபாடே முக்கிய இடத்தினை வகித்தது. விவசாயத் துறையில் ஈடுபட்ட மக்கள் பூமாதேவியைத் தாயாகக் கண்டனர்.

பராசக்தியாகிய அம்பாள் அறக்கருணை மூலமும் மறக்கருணை மூலமும் அருள் செய்ய வல்லவள். அதாவது அன்பின் மூலமும், தண்டித்தல் மூலமும் அருள் செய்வாள். அம்பாள் வழிபாட்டைப் புராணங்கள் விரிவுபடுத்தின. தேவிபாகவதம் அம்பாளுக்கு முதன்மை கொடுத்து அம்பாளின் பல்வேறு மூர்த்தங்களையும் அவற்றுக்குரிய மந்திரங்களையும் சிறப்பித்தன.

காளிதாச மகாகவியும் சத்தியின் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார். இதிகாச புராணத்தில் தாட்சாயினி, பார்வதி பற்றிய கருத்துக்கள் உண்டு. தென் இந்திய வரலாற்றுக் காலத்திலிருந்து சத்தி வழிபாடு சிறப்படைந்திருந்தது. பாலை நில மக்கள் கொற்றவையை வழிபட்டிருந்தனர். அக்கால நூலின் 'ஓங்கு புகழ் கானமர்ச் செல்வி' எனவும், திருமுருகாற்றுப்படை, வெற்றிவேல் போர்க் கொற்றவை எனவும் குறிப்பிடுகின்றது.

மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் சத்தியானவள் காளி, மகாசரசுவதி, துர்க்கை என்ற பெயர்கள் உண்டு. காரைக்காலம்மையார் சிவனைப் போற்றிப் பாடும் போது சத்தியினையும் போற்றிப் பாடியிருந்தமை குறித்தற்குரியது.

20-ஆம் நூற்றாண்டிலேயே அம்பாள் (சத்தி) வழிபாடு சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். வீடுகள், பாடசாலைகள், வேலைத் தளம் என்பனவற்றில் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. இவ்வாறு வரலாற்று நோக்கியே சத்தி வழிபாட்டினைப் பற்றி அறியலாம்.

நம் நாட்டில் அநாதியாக வரும் தெய்வ வழிபாடுகளில் சத்தி வழிபாடு முக்கியமானது. வேதங்களிலும், புராணம், இதிகாசம், இலக்கியங்களிலும் உபநிடதங்களிலும் சத்தி வழிபாட்டிற்கு அநேக ஆதாரங்கள் காணப்படுகின்றன. சத்தியை உணர முடியுமே தவிர எடுத்துக் காட்ட முடியாது. நம் கண்களில் பார்க்கும் சத்தி, காதுகளில் கேட்கும் சத்தி, கால்களில் நடக்கும் சத்தி, வாயில் பேசும் சத்தி முதலியவைகள் இதற்கு எடுத்துக்காட்டாகும். சக்தியின்றி ஒருவராலும் ஒரு வேலையும் செய்ய முடியாதல்லவா? இச் சத்தியை வழிபட்டு இவ்வுலகில் சகல சுகங்களையும் அடைந்து, பிறகு பரம்பொருளை அடைவதே சத்தி வழிபாட்டின் தத்துவமாகும்.

திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள்

(தொடர்)

சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி
கோபி

4. திருக்குறளின் அறவியல் மெய்யியல் அடித்தளம்

முன்னுரை

திருக்குறள் உலகப் பார்வை கொண்ட அறநூல். அறவியல் அடித்தளத்தில் வாழ்வியல் மெய்யியல் உணர்த்துவது. எனவேதான் அதற்கு இணையான நூல் எதுவும் இல்லை என்பர். அதன் அறவியல் மெய்யியல் அடித்தளத்தைக் குறள் நெறி நின்று காண்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

திருக்குறளின் மெய்யியல் அடித்தளமாவன,

1. உலகளாவிய பார்வை
2. முழுமையான மாந்தப் பார்வை
3. வாழ்வியல் நோக்கு
4. சமயங் கடந்த பார்வை
5. இயற்கை நோக்கும் போக்கும்
6. காமத்துப் பாலின் மெய்யியல் நோக்கு
7. பொருள் என்பதன் அறவியல் மெய்யியல்
8. கடவுள், தெய்வம் என்பதன் மெய்ம்மை
10. இம்மை மறுமை, மாந்தவளம் பற்றிய மெய்ம்மை

மேற்காட்டிய அடித்தளத்துடன் திருக்குறளின்அறவியல் காண்பதே இக்கட்டுரை.

இன்று வரை கண்டவையும் இனிக் காண உள்ளனவையும் அறிமுக உரை.

1. குறளாசான் கூறும் நுண்ணிய சொற் பொருள் விளக்கம் (கண்டோம்)
2. குறளாசானின் மையக் கருத்தாகிய நோக்கு அறிந்தோம்.

   இனிக் காண்பன,

3. குறளாசானின் அறவியல் மெய்யியல் (இக்கட்டுரை)
4. குறள் நெறி மறுத்த அயல்நெறி அறிதல்
5. குறளின் உலகளாவிய பொதுமைப் பார்வை அறிதல்
6. குறள் தோன்றிய காலத்து மாந்தர் நிலையறிதல்
7. தனித்தமிழர் கண்ட அறிவர் நெறி அறிதல்
8. தமிழர் கண்ட அறவியல் மெய்யியல் அறிதல்
9. முதல் நான்கு அதிகார நுட்ப உட்பொருள் அறிதல்
10. திருக்குறளின் நோக்கும் உலகப் பார்வையும் அறிதல்

மேலும் இங்கு நாம் சில செய்திகட்குரிய விளக்கம் காணுதல் வேண்டும். அவையாவன,

1. திருவள்ளுவரின் கடவுள் – தெய்வக் கோட்பாடு
2. திருக்குறளின் இம்மை மறுமைக் கோட்பாடு
3. ஆளுமை மிக்க அறம் பொருள் இன்பம்
4. சமூக நீதிக் கோட்பாடு
5. தமிழரின் சமயக் கோட்பாடு
6. தமிழரின் அரசியல் பொருளியல் வாழ்வியல்
7. தமிழரின் பெண்ணியம்
8. திருக்குறளின் மாந்தவளம்
9. திருக்குறளின் ஊழியல்

இவற்றைப் பற்றி விரிவாகப் பின்னர் வரும் கட்டுரைகளில் நாம் காண்போம். எனவே விளக்கத்திற்காக வரும் மேற்கோள்களையோ? கருத்துக்களையோ? கூறியது கூறல் என நினைக்கக் கூடாது. சாமானியரும் உணர்ந்திட வேண்டும் என்ற நோக்கமே இதன் கரணியம்.

திருக்குறளின் அறவியல் மெய்யியல் அடித்தளம் காண நமக்கு உதவும் குறட்பாக்கள்.

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம் (34)

   (இக்குறளுடன், 740, 750, 819, 828, 848, 849, 850 என்றுள்ள குறட்பாக்களையும் காண்க. அத்துடன் சொல் மாசு செயல் மாசு களைவனவும் காண்க.
2. அறத்தான் வருவதே இன்பம் (39) (இவற்றுடன் 24 நல்குரவு, ஒப்புரவறிதல், ஈகை, அருளுடைமை காண்க)
3. பசு மட் குடத்துள் நீர் பெய்தது (660) தீயவழி வரும் பொருள் அழியும் எனல் காண்க. (இங்கு 259, 754 காண்க.)
4. மலரினும் மெல்லிது காமம் – உணர்வார் சிலர் (மிகவும் சிலர்) (வேறு வேறுபட்ட மாந்தநிலைகளே உலகியல் நோய்க்குக் காரணம்)

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

வாசகர் வாசகம் ③

மதிப்பிற் சிறந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர், வணக்கம்.

வாழ்க நலம். செந்தமிழ் ஆகஸ்டு 2012 மிக நன்றாக அமைந்துள்ளது. இவ்விதழ்ச் செய்திகளைப் பாராட்டிச் செந்தமிழின் சிந்தனை முத்துகள் எனும் எண்சீர் விருத்தம் (1 பக்கப் பாடல்), மற்றும் இச்சிந்தனை ஆக்குவித்த 1 பக்கப்பா (எண்சீர் விருத்தம்) பேச்சுச் சொல்லும், எழுத்துச் சொல்லும் என்னும் 2 கவிதைகளை,அனுப்பியுள்ளேன். எடைமிகை கருதி, கடிதத்தை அதனொடு சேர்க்காமல், தனியே எழுதினேன். அன்பு ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்புடன்,
புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

வாசகர் வாசகம் ④

செந்தமிழ் இதழை வாழ்த்தி

அருட்பாவாம் இலக்கியத்துள் நம்மை ஆழ்த்தி
அருந்திருவி ளையாடற் புராணம் சாற்றி
பெருமையுற பரஞ்சோதி யண்ணல் போற்றி
பேருற்ற தேவாரப் பண்ணு ணர்த்தி
தரும் சொல்லில் திசைச் சொல்லின் பாங்குரைத்துத்
தமிழருடைப் பேச்சுமொழி எடுத்தியம்பி
கரும்பனைய கட்டுரைகள் கவிதை நல்கிக்
களிப்பூட்டும் செந்தமிழாம் இதழை வாழ்த்து !

அன்புடன்,
பாவலர் அறிவரசன், திருலோக்கி

வாசகர் வாசகம் ⑤

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

2012 சூலை மாதச் செந்தமிழ் இதழில் வீர சோழ அன்பர் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் திருப்புகழ் இன்பம் குறித்த கட்டுரையில் அருணகிரித் தமிழின் செறிவைச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். நாம் நாளொன்றுக்கு 21600 முறை மூச்சு விடுவது பற்றி அருணகிரியாரின் சிந்தனை வரி வழியான நன்றுதான் என்றாலும், அதுபற்றித் திருமூலர் சொன்னார், சித்தாந்தம் சொல்கிறது என்றெல்லாம் எழுதியும் பேசியும் அறிந்தவர்கள் திருப்புகழில் இல் பழக் கூறப்பட்டதை இது வரை நான் கூறக் கேட்டறியேன். இது மற்றவர்களோடு அருணகிரியாரையும் சேர்த்துக் கூற நல்ல நினைவுபடுத்திய கட்டுரையாளருக்குப் பாராட்டு.

இந்த 21600 என்ற மூச்சுக்கு மூன்று கோயில்கள் எடுத்துக் காட்டாக உள்ளன. 1. சிதம்பரத்தில் பொன்னோடு 21600. 2. திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயில் கருவறை மண்டபத்தில் உள்ள செப்புத் தகடுகள் 21600, 3. வடலூரில் உள்ள ஞானசபையின் சங்கிலிப் பிணைப்புகள் 21600. இவைகள், திரு ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் குறித்தது போல மனித ஆயுள் நீண்டு நோயுற்ற வாழ்வு வாழ ஆன்றோர்களால் தரப்பெற்ற தான மருந்து, யோக மருந்து எனலாம்.

முனைவர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 October 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**